# காந்தீயம்

அகில இலங்கைக் காந்தி சேவா சங்கத்தின் திங்கள் வெளியீடு

Registered at the G.P.O. as a Newspaper in Ceylon

விலை சதம் 10


**அறிவிப்பு**

காந்தீய - சர்வோதய இலட்சியங்களுக்கமைய கிராமங்களிலும் நகரங்களிலும் சேவை செய்வதற்கு ஊழியர்கள் தேவை.
விபரங்களுக்கு:-
காந்தி நிலையம்,
உருத்திரபுரம்.


மலர் 10 | காந்தி நிலையம் - உருத்திரபுரம் (காந்தி ஆண்டு 103) 1972 ஒக். நவ. டிஸம்பர் இதழ் 1. 2. 3


# அச்சம் தவிர்த்த அண்ணல்

காந்தி அவதாரத்தை எத்தனை தரமானாலும் எந்தக் கோணத்திலும் விமர்சிக்கலாம். தரிசிக்கலாம். அணுகலாம். அதுநமக்குச்சலிப்பதில்லை. அது நம்மை உயர்த்துகிறது.

காந்தி வாழ்ந்த காலத்தில் நம் நாடு அடிமைப்பட்டுக் கிடந்தது. அடிமைத் தனத்துச்கு ஒரே முழு முதற் காரணம் அச்சம். அஞ்சும் எவரும் அடிமையாகிறார். நமது மக்கள் வெள்ளையர் ஆதிக்கத்திற்கு அஞ்சிக் கிடந்தனர். ''அஞ்சி அஞ்சிச் சாவார், அவர் அஞ்சாதபொருளில்லை அவனியிலே,, என்று நெஞ்சு பொறுக்காமல் புலம்பினார் பாரதியார். காந்தி அவதரித்தார். அச்சந்தவிர்த்தார். அச்சம்என்றஇருள் அகன்றபோது, நமதுமக்களின் ஆற்றல் புலனாயிற்று. அறிவு தெளிவுற்றது. ஆக்கம்பெருகிற்று, நொடிப்பொழுதில் அடிமையும் அகன்றது. சுதந்திரம் துலங்கிற்று.

காந்தி மறைந்தார். திரும்பவும் நம்மை அச்சம் பற்றிக் கொண்டது. அன்று அ ந்நியரிடம் அச்சம். இன்று நம்மவரிடம் அச்சம். நமது தலைவர்கள் ஒருவரை யொருவர் நம்பவில்லை. பதவியிலுள்ளோருக்கு வெளியிலுள்ளோரைக் கண்டு அச்சம். வெளியிலுள்ளோருக்கு பதவியிலுள்ளோரைக் கண்டு அச்சம். ஆட்சி பீடத்திலுள்ளவர்கள் மக்களைச் சந்திக்க அஞ்சவும், மக்கள் ஆட்சியாளரிடம் அஞ்சவும் பரஸ்பரம் அச்சம் என்றஇருள்படர்ந்து வருகிறது.



காந்தி காலத்தில் அகன்றிருந்த இந்த அச்சம் என்னும் இருள் இதுவரை எங்கே ஒளிந்து கொண்டிருந்தது? வேறு எங்குமல்ல, அது நமக்குள்ளேயே ஒளிந்து கொண்டிருந்தது. அன்று காந்திஒளியில் அகன்றது. அந்த ஒளி அகன்றபோது திரும்பவும் அது சூழ்ந்திருக்கிறது. அன்று அந்த ஒளியில் நமது ஆற்றல் புலனாயிற்று. சத்தியமும் அன்பும் துலங்கிற்று. இன்று அச்சம் புகுந்ததால் நமது அகந்தையும்அதிகார ஆசையும் குறுகிய சுயநலமும் சந்தேகமும் நம்மைப் பற்றிக் கொண்டன. இதற்கு உடந்தை நாடாளும் தலைவர்கள் மாத்திரமல்ல, நாம் எல்லோருமே இதற்கு உடந்தையாவோம்.

அச்சந் தவிர்த்த அண்ணல் காந்தியடிகளின் பேரொளி என்றென்றும் அவர் தம் சத்திய சோதனையில் அணையா விளக்காக இருந்து வருகிறதை நாம் காண வேண்டும். அக்கைவிளக்கைத் துணைக் கொண்டால் நம்மைப் பற்றியுள்ள அச்சம் தவிர்க்கலாம். அச்சம் தவிர்த்து ஆற்றல் பெறலாம்; சத்திய தரிசனம் காணலாம். நம்மைப் பற்றியுள்ள பலவீன மெல்லாம் அகலும். ஆயினும், தவமும் தவமுடையார்க்கே என்றார் ஆன்றோர். தவமுள்ளோர் அண்ணல் காந்தி யடிகளின் சத்திய சோதனை என்ற கைவிளக்கப் பெறுவார்களாக! அக்கை விளக்கின் பயனாக அச்சம் தவிர்த்து ஆற்றல் பெறுவார்களாக!

காந்தீயம்

உருத்திரபுரம், [இலங்கை]
தொலை பேசி; 254
கிளிநொச்சி
காந்தி ஆண்டு 103
1972, ஒக்ரோபர்
நவம்பர்
டிஸம்பர்

# முழுமையும் பகுதியும்

ஒரு நாட்டினை முன்னேற்றுவதற்கு யாவரும் ஒன்றுபட்டு உழைப்பதா அல்லது பிளவுபட்டு, மாறுபட்டு, உழைப்பதா நல்லது? இக் கேள்விக்குரிய விடையை எந்தக் குழந்தைப் பிள்ளையும் சொல்லிவிடும். எனவே நாடுகளில் பலகட்சிகள் தோன்றுவதன் காரணமென்ன? எல்லோரும் பொது நன்மை ஒன்றையே விரும்பி உழைப்பவர் களானால் பொது நன்மைக் குரிய அலுவல்களில் ஏன் ஒத்துழைக்கக் கூடாது?

இதற்குரிய காரணம் நாட்டுக் குழைக்கும் விருப்பத்தோடு அதிகார ஆசையும் பலரிடை பரவிப் பெருகி வருவதாம். அதிகாரம் இருந்தால் தான் பொதுமக்களுக்கு நன்மை பயக்கும் பல திட்டங்களை விரைவில் வகுத்துச் செயற்படுத்தலாம் என்பது உண்மையே. ஆயின் நன்மை செய்வதற்கு அதிகாரம் வேண்டுமென்ற குறிக்கோள் நாளடைவில் உருமாறி, நன்மையென்பதின் குறிக்கோள் மறைந்து, அதிகாரத்தின் குறிக்கோளே தலைமிகுந்து நிற்கிறது. இது அரசியலில் தோன்றும் முதற் பிழை.

அடுத்து என்ன தோன்றுகிறது என்று பார்ப்போம். இந்த அதிகார ஆசை மக்களுக்குரிய நன்மை எப்படிப் பட்டது அதனை அடைவதற்கு எது இலகுவான வழி என்பவற்றில் மாறுபட்ட கருத்துக்களை அரசியலாரிடத்தும் தோற்றுவித்து விடுகிறது. தாம் கொண்ட கொள்கை மற்றையவர் கொள்கையிலும் மிகச் சிறந்தது என்று உண்மையில் கருதுபவர் மிகச் சிலரே. ஆயின் பெரும் பான்மையோர் மாறுபட்ட கொள்கைகளை விரித்துரைப்பதும் மககளுக்குரிய பெரு நன்மைக்கு விரைவான நல்வழி ஒன்றினை விடாது பற்றிக் கொண்டிருப்பதும் தாம் கொண்ட அதிகார ஆசையாலும் தன்னபிமானத்தாலுமேயாம். அதிகார ஆசையும் அபிமானமும், காமத்தை வெகுளியைப் போல், கடிந்து ஒதுக்க வேண்டிய தீயகுணங்களே.

இந்த, அதிகார ஆசை அபிமானம் ஆகிய குணங்களே மனிதகுலத்திடை எல்லாப்பிளவுகளுக்கும் முக்கிய காரணங்களாம். இதைப் பார்ப்போம்.

மக்களுக்குத் தொண்டு செய்ய வேண்டுமென்று அரசியலிலோ சமூகத் தொண்டிலோ ஈடுபடுவார் மிகச்சிலரே. இவற்றில் பெரும் பாலாரை ஈடுபடச் செய்வது தம்கொள்கை அபிமானமும், தம்மைச் சார்ந்தோரிடை புகழ் நிலை பெற வேண்டுமென்ற ஆசையுமாம். இவ்விரண்டு சக்திகளைக் கொண்டே கட்சிகள் அமைக்கப்படுகின்றன.

கட்சிகள் உருவாகியதும் கட்சியைக் காப்பாற்றுவதிலேயே கட்சியினர் காலமும் சக்தியும் விரயமாகின்றன. கட்சியை நிறுவுவதற்கு முதற் காரணமாயிருந்த மக்கள் சேவை கண் முன்னிலிருந்தும் மறைந்து போய் விடுகின்றது. கட்சிக்கு நிரந்தரமான ஓர் ஆதரவாளர் கூட்டம் பெருகு கின்றது. இக்கட்சியின் தலைமைப் பீடத்தின் குலம், கல்வி, சமயம் ஆகியவற்றிற் கியைய ஓர் ஆதரவாளர் படை உதயமாகின்றது. இந்தப் புறக் காரணப் பற்றுக்களான குலம், சமயம் முதலியவை நாளடைவில் கட்சியின் எண்ணக் கருத்துக்களை திசை திருப்பி விடுகின்றன. சேவை உள்ளம் கட்சியின் பற்றினால் சீர் கெட்டுப்போகிறது.

இன்னுமொரு விடயம்,

பிரித்தானிய அரசியல் நெறியைப் பின்பற்றி ஆளுங் கட்சிக்கு ஓர் எதிர்க் கட்சியிருத்தல் வேண்டும், மாறி மாறிக் கட்சிகள் அதிகாரத்திற்கு வந்தால் மக்களாட்சி முறைமை சீரோங்கும் என்று சிலர் சொல்வார்கள். இது ஒரு தப்பான அபிப்பிராயம். மற்றையவர் சொல்வது செய்வதை ஒப்பாசாரத்திற்கு எதிர்ப்பது வீண் சக்திவிரயமே அன்றி வேறு ஒன்றும் இல்லை. தெளிந்து தேறி ஒரு பணியில் ஒருவர் இறங்குவதை, ஆதாரமும் சான்றும் இன்றி, மக்களாட்சி முறைமை என்று சொல்லி எதிர்ப்பது அறிவுடைமையாகாது.

மக்களாட்சி முறை என்பது கட்சியாட்சி முறையன்று. மக்கள் எல்லோரும் ஒன்றுபட்டு நாட்டு மக்களின் துன்பம் துடைத்து எவ்வாறு இன்பம் பெருக்கலாம் என்று ஏகோபித்து ஆளலே மக்களாட்சிமுறை, இங்கிலாந்தின் வரலாற்றில் மக்களாட்சியானது கட்யாட்சி முறைமையில் வளர்ந்திருக்லாம். ஆயின் பல பிளவுகளை இயற்கையாகக் கொண்ட நம் நாட்டில் கட்சியாட்சி எம் சக்தியையும் ஆற்றலையும் சேதப்படுத்தி விடும். மக்களுள் உயர்ந்தோர் ஒழுக்கமும், ஆற்றலும், ஆளுந் திறனும் உடையவர்கள்-ஒன்று சேர்ந்து ஆளுதல் தான் உண்மை மக்களாட்சியாகும். மக்களாட்சி என்பதை மக்களின் ஒன்றுபட்ட, பிளவுபடாத ஒரு வழிப்படுத்தப்பட்ட சக்தியின் ஆட்சியாகக் கொள்ளல் வேண்டும்.

எல்லோரையும் ஆளுவார் ஆக்கும் ஓர் உபாயதைக் கடைப்பிடிக்கும் ஆட்சியே மக்களாட்சி. மற்றைய முறைமையெல்லாம் அவலஆட்சிகளாகும். இதனைலன்றோ, அரசியல் என்பதை ''ஆதிக்க விஞ்ஞானம்'' என்று பல அறிஞர்கள் கூறுகின்றனர் —இ. இ.

# சர்வோதய பயிற்சி முகாம்

103 ஆவது காந்தி ஜெயந்தியை முன்னிட்டு 29-9-72 தொடக்கம் 3-10-72 வரை 5 நாட்கள் இரத்மலானை சர்வோதய நிகேதனில் சர்வோதயப் பயிற்சி முகாம் ஒன்று வெகு சிறப்பாகவும், வெற்றிகரமாகவும் நடைபெற்றது.

மலையகத்தின் பல பாகங்களிலிருந்தும் பல தொண்டர்கள் சமுகங்கொடுத்திருந்தனர்.

''நம் நாட்டு மக்கள் உழைப்பில்லாமல் எப்படிச் சீவிக்கலாம் என்ற நினைப்பிலேதான் வாழ்க்கை நடத்தப் பார்க்கிறார்கள். மனித உழைப்புத்தான் நாட்டு முன்னேற்றத்துக்கு வழி வகுக்கும். மனமாற்றம், மனிதருக்குள்ளே ஏற்றத் தாழ்வற்ற சமத்துவநிலை, கட்டுப்பாடான சீவியம் ஆகிய அடிப்படைக் கொள்கைகளை அமைத்துத்தான் காந்தியடிகள் சர்வோதயத் திட்டத்தை வகுத்துத் தந்திருக்கிறார்கள். இந்த அடிப்படையில் ஒவ்வொரு மனிதனும் தனது வாழ்க்கையை அமைத்துக் கொண்டால் நிம்மதியான வாழ்க்கை நடாத்தலாம்''

ஊழியர்கள் சர்வோதய நிகேதனுக்கு வந்து சேர்ந்த பொழுது அகில இலங்கைக் காந்தி சேவா சங்க பொதுச் செயலாளர் திரு. சி. க. வேலாயுதபிள்ளை மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

சர்வோதயப் பயிற்சி முகாமில் தொண்டர்கள் நடந்து கொள்ள வேண்டிய முறை பற்றி சர்வோதய நிகேதன் நிர்வாகி திரு. சோ. க. தம்பிப்பிள்ளை ஒரு சிறந்த விளக்கவுரை நிகழ்த்தினார்.

இந்தியத் தூதுவரின் பிரதிநிதியான திரு. கே. பி. தேவ் இந்த முகாமைக் குத்து விளக்கேற்றி ஆரம்பித்து வைத்தார்.

முன்னாள் மூதவைத் தலைவரும், மகாத்மா காந்தி றஸ்ரின் தலைவருமான திரு ஏ. இரத்நாயக்கா தொழிலாளர் தேசிய சங்கத் தலைவர் திரு. சீ. வி வேலுப்பிள்ளை, ஈழநாடு ஆசிரியர் கே. பி. ஹரன் ஆகியோர் விசேட பேச்சாளர்களாகக் கலந்து சர்வோதயம் பற்றிச் சிறந்த சொற்பெருக்காற்றினர்.

'' மகாத்மா காந்தி றஸ்றிலிருந்து அகில இலக்கைக் காந்தி சேவா சங்கத்துக்கு வேண்டிய பொருளுதவி செய்ய நாம் ஆயத்தமாக இருக்கிறோம ''என்று திரு. இரத்நாயக்கா குறிப்பிட்டபோது சபையோர் கரகோஷஞ் செய்து வரவேற்றனர்.

மாலை நிகழ்ச்சியில் கலந்து கொண்ட பொலிஸ் சுப்பிரீன்டன் திரு. ரி. தளையசிங்கம் காந்தி சேவா சங்கப் பணிகளைப் பாராட்டி நூறு ரூபா அன்பளிப்புச் செய்தார்,

2ம் நாள் நிகழ்ச்சிகளுக்கு பிரபல வர்த்தகர் திரு சண்முகம்வள்ளிநாயகம் அவர்களும், 3ம் நாள் நிகழ்ச்சிகளுக்கு கொழும்பு இந்துக்கல்லூரி அதிபர் திரு கே. சிவபாலன் அவர்களும் தலைமை தாங்கினார்கள். மேற்படி நிகழ்ச்சிகளின் போது திரு இ. இரத்தினம் சர்வோதயமும் சமூகமும் என்னும் பொருள் பற்றியும் திரு ஆ. ம. செல்லத்துரை சுதேசி என்னும் பொருள் பற்றியும் சிறந்த கருத்துரை வழங்கினர்.

மூன்று நாட்கள் நடைபெற்ற சிரமதானம் பெரும் பயனுடையதாக அமைந்தது. பங்கு பற்றிய ஊழியர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

ஒவ்வொரு நாளும் நடைபெற்ற காந்தி அடிகளின் வாழ்க்கை வரலாறு அடங்கிய திரைப்படக் காட்சி பொது மக்களுக்கு ஒரு வரப் பிரசாதமாக அமைந்திருந்தது.

# வரவு செலவு

வரவு-செலவு

அகில இலங்கைக் காந்தி சேவா சங்க கொழும்புக்கிளை சர்வோதயநிகேதனம் [1972 ஒக்ரோபர், நவம்பர், டிஸம்பர்] வரவு-செலவு விபரம்.

| | | |
|---|---|---|
| வரவு | | |
| கையிருப்பு | 77 | 15 |
| சர்வோதய பாத்திரம் | 33 | 90 |
| சம்பத்துத்தானம் | 360 | 75 |
| அரிசி | 212 | 45 |
| விடுதிக்கட்டணம் | 70 | 00 |
| காந்திநிலையம் | 500 | 00 |
| கமம் | 16 | 20 |
| காந்தீயம் | 225 | 00 |
| மொத்தம் | 1495 | 45 |
| செலவு | | |
| உணவு | 117 | 32 |
| பிரயாணம் | 56 | 65 |
| சலூன் | 4 | 00 |
| மாணவர் செலவு | 12 | 77 |
| சம்பளம் கைச்செலவு | 89 | 85 |
| வயித்தியம் | | 65 |
| கட்டடம் | 307 | 41 |
| தபால் | 3 | 75 |
| கோகுலம் | 19 | 77 |
| காந்தீயம் | 34 | 00 |
| அச்சகம் | 134 | 70 |
| உபகரணம் | 146 | 25 |
| விழா | 14 | 10 |
| திருத்தம் | 21 | 25 |
| கமம் | 1 | 00 |
| கணக்குப்பரிசோதனை | 75 | 00 |
| கடன் | 343 | 47 |
| கையிருப்பு | 132 | 51 |
| மொத்தம் | 1495 | 45 |

நாங்கள் எங்கள் வாழ்க்கையில் என்றுமே அனுபவித்திராத சந்தோஷத்துடன் மலையகத்துக்குத் திரும்புகிறோம், நீங்கள் தந்த பயிற்சியையும், கருத்துக்களையும் மலையக மக்களுக்கு எடுத்துச் செல்லுகிறோம். எங்கள் மக்களின் ஒளிமயமான எதிர்காலத்துக்கு அகில இலங்கைக் காந்தி சேவா சங்கம் வழிகாட்டு மென்பதை பூரணமாக நம்புகின்றோம். வருங்காலத்தில் நடைபெறப்போகும் முகாங்களுக்கு நூற்றுக்கு மேற் பட்டோர் சமுகந் தந்து தொண்டு புரிய ஆசைப் படுகிறோம்.

ஊழியர்கள் முகாமை விட்டு வெளியேறும் போது மேற்கண்டவாறு கூறியமை யாவரது உள்ளத்தையும் உருக்குவதாக இருந்தது.

# சம்பத்துத் தானம்

இரத்மலானை சர்வோதய நிகேதனத்தில் இருக்கும் மாணவர்களின் செலவுக்காக [1972 செப்ரெம்பர், ஒக்ரோபர், நவம்பர், டிஸம்பர் மாதங்களில்] சம்பத்துத்தானம் அளித்த அன்பர்கள்.

| | | |
|---|---|---|
| அலெக்சாந்திராவீதி | | |
| திருமதி. கனகராஜா | 10 | 00 |
| திருமதி. எஸ் கந்தையா | 20 | 00 |
| திருமதி. க. சிற்றம்பலம் | 10 | 00 |
| திருமதி. எஸ்.பீ செல்வரத்தினம் | 2 | 00 |
| திருமதி. ச. பரமேஸ்வரன் | 20 | 00 |
| திருமதி. வி. பேரம்பலம் | 5 | 00 |
| திருமதி. இ. குமாரசிங்கம் | 5 | 00 |
| சாளிமென்றவீதி | | |
| திருமதி. சின்னத்தம்பி | 10 | 00 |
| திருமதி. வி. சுந்தரம் | 10 | 00 |
| திருமதி. இ. சதாசிவம் | 4 | 00 |
| ஈ. எஸ். பெர்னுந்து மாவத்த | | |
| திரு. ஸி. பரராசசேகரம் | 3 | 00 |
| திரு. நவரத்தினம் | 1 | 00 |
| திருமதி. என் கந்தசாமி | 2 | 00 |
| திருமதி. குமாரசாமி | 2 | 00 |
| திருமதி. கனகசபை | 1 | 00 |
| 36ஆவது ஒழுங்கை | | |
| திருமதி. பா. சுந்தரலிங்கம் | 20 | 00 |
| திருமதி. அ. கைலைநாதன் | 2 | 00 |
| திருமதி. என். ஜயதேவா | 15 | 00 |
| திருமதி. இ. ஆனந்தன் | 5 | 00 |
| திருமதி. பவானந்தன் | 30 | 00 |
| திருமதி. சு சிவசுப்பிரமணியம் | 20 | 00 |
| ஓர் அன்பர் | 20 | 00 |
| விவேகானந்தவீதி | | |
| செல்வன் சஞ்சீவன்-சிவலிங்கம் | 20 | 00 |
| திரு. கே. பேரம்பலம் | 3 | 00 |
| நெல்சன் பிளேஸ் | | |
| திரு. சு. கந்தையா | 10 | 00 |
| பாமன்கட | | |
| திருமதி. ஹைமவதி சோமசேகரம் | 40 | 00 |
| திருமதி. ஸி. மணி | 2 | 00 |
| இராசவல்லி ஒழுங்கை | | |
| திருமதி. வேலாயுதபிள்ளை | 8 | 00 |
| ஹம்டன் ஒழுங்கை | | |
| திருமதி. ஜி. எஸ். பொன்னையா | 4 | 00 |
| திருமதி. ம. பரஞ்சோதி | 2 | 00 |
| தயா வீதி | | |
| திருமதி. செ. இரத்தினதிக்கம் | 8 | 00 |
| கல்யாணிவீதி | | |
| திருமதி. இ. இரத்தினம் | 5 | 00 |
| திருமதி. கே. விஸ்வரத்தினம் | 1 | 00 |
| திருமதி. எஸ். தணிகாசலம் | 1 | 00 |
| திருமதி. வி. பொன்னுச்சாமி | 1 | 00 |
| 53ஆவதுஒழுங்கை | | |
| திருமதி. ப. இராசமாணிக்கம் | 3 | 00 |
| 55ஆவதுஒழுங்கை | | |
| திருமதி. இ. சற்குணநாயகம் | 1 | 00 |
| ஹரிச்சந்திரமாவத்த | | |
| திருமதி. ம. நடராஜா | 6 | 00 |
| திருமதி. ம. கனகசபை | 1 | 00 |
| திருமதி. க. குமாரசாமி | 8 | 00 |
| டபிள்யூ. எ. சில்வாமாவத்த | | |
| திருமதி. தி. கந்தசாமி | 6 | 00 |
| திருமதி. இராசநாயகம் | 2 | 00 |
| செல்வி. வி. செல்லப்பா | 6 | 00 |
| திருமதி. தா. கணேந்திரன் | 12 | 00 |
| திருமதி. பொ. குலசிங்கம் | 7 | 25 |
| புகையிரநிலையவீதி | | |
| ஆ. குணநாயகம் | 5 | 00 |
| பெரேராஒழுங்கை | | |
| திருமதி. க. சோமசேகரம் | 4 | 00 |
| திருமதி. பி. நடராஜா | 5 | 00 |
| உலகபௌத்தமத்யஸ்தவீதி | | |
| திருமதி. சோ. விஸ்வநாதன் | 20 | 00 |
| லில்லி அவென்யூ | | |
| திரு. பொ. நல்லையா | 15 | 00 |
| மனிங்பிளேஸ் | | |
| திருமதி. இ. ஜெர்மையா | 4 | 00 |
| திருமதி. க. இராசலிங்கம் | 20 | 00 |
| கொழும்பு | | |
| திரு. எம். குணரத்தினம் | | |
| கட்டடத்திணைக்களம் | 2 | 00 |

## கடையனும் கடைத்தேற

இன்று நம் நாட்டில் மாற்றத்திற்கான சூழ்நிலை தோன்றியுள்ளது. நமது அரசிற்கு சாதாரண மனிதனைப் பற்றி கவலை ஏற்பட்டுள்ளது. நிலம், சொத்து ஆகியவற்றிற்கு உச்சவரம்பு கொண்டுவர சட்டம் இயற்றப்படுகின்றன. இம் முயற்சிகள் யாவும் வரவேற்கத் தக்கதே. ஆனுல் நமது முக்கியகவலை

இந்நாட்டிலுள்ள கடை நிலைமனிதனைப்பற்றியதே. நாட்டின் இக் கடைநிலை மனிதன் ஏழையாகவும், திக்கற்றவனுகவும் இருக்கிருன். எனவே இந்நாட்டின் திட்டம், கல்வி, விவசாயம், தொழில் கொள்கை யாவும் கடைநிலை மனிதனின் வாழ்க்கைப் பிரச்சனையைத் தீர்க்கக் கூடியதாக அமைவது அவசியமாகும். கடையனும் கடைத்தேறும் (அந்த்யோதயம்) அடிப்படையில்தான் பொருளாதார சமூதாயக் கொள்கைகள் நிலைத்து வெற்றிபெறமுடியும்.

—சர்வோதயம்

| | | |
|---|---|---|
| திரு. சொ. முத்து | | |
| 401, அலுத்மாவத்தவீதி | 5 | 00 |
| திரு. எஸ் சிவசுப்பிரமணியம் | | |
| ஹல்ஸ்டப்வீதி | 5 | 00 |
| திரு. பி. நல்லசிவம்பிள்ளை | | |
| பிளவர் வீதி | 25 | 00 |
| திரு. ரி. தளையசிங்கம் | | |
| புல்லர்ஸ் ஒழுங்கை | 100 | 00 |
| பம்பலப்பிட்டி, | | |
| திருக்குடும்பமடம் | | |
| செல்வி. ராதா. அந்தோனிப்பிள்ளை | 5 | 00 |
| செல்வி. யசோதா. தனபாலசிங்கம் | 20 | 00 |
| செல்வி. வசந்தி-கந்தசாமி | 20 | 00 |
| தெகிவளை. | | |
| இரத்னுகரஇடம் | | |
| திருமதி. க. கந்தசாமி | 3 | 00 |
| திருமதி. ம. கனகலிங்கம் | 8 | 00 |
| திருமதி. நா. இரத்தினசிங்கம் | 4 | 00 |
| திருமதி. எ. அமிர்தானந்தன் | 8 | 00 |
| திருமதி. இராமசாமி | 5 | 00 |
| கல்கிசை | | |
| செல்வி. த. சிதம்பரநாதர் | 3 | 00 |

இப் பத்திரிகை அகில இலங்கைக் காந்தி சேவாசங்கத்திற்காக உருத்திரபுரம் சி.க. வேலாயுதபிள்ளை அவர்களால் இரத்மலானை காந்தி சேவா சங்க சர்வோதய அச்சக உபகரணங்களின் உதவியுடன் கொழும்பு குமரன் அச்சகத்தில் அச்சிடப்பட்டது.